

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.11.2024) தனது வாகன ஓட்டுநர் பாஸ்கரின் தந்தையும், சென்னை தேனாம்பேட்டை பகுதியின் கழக மூத்த முன்னோடியுமான துரை அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானதையொட்டி, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், வி.ஜி.ராஜேந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

# தென்காசி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிவிப்பு!



தென்காசி, நவ. 23 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (23.11.2024 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர்கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி,கழக இளைஞர் அணி செயலாளர்-துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (23 ஆம் தேதி) மாலை 5 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**

வருகிற 27ஆம் தேதி கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்தும்.

கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கழக தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கவனத்திற்கு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டுதமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம்- 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம்- 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம்- 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப்படிவமான படிவம்-6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்-6ன் கலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024.

2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள்23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024(ஞாயிற்றுக்கிழமை).

4.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்றதலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு:** வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும், மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் வாக்காளர் சேர்க்கும் பணிகளைதலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பார்வையிட உள்ளனர்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# மாநில சுயாட்சி மத்தியில் ஒலித்த, மாமேதை முரசொலி மாறன்!



நமது உள்ளத்தில் அழியாத ஓவியமாம் உயிரனைய தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக, கழகத்தின் முக்கிய மூளையாக திகழ்ந்து, மாநில சுயாட்சி முழக்கத்தை வடிவமைத்து, கூட்டாட்சி தத்துவத்தை தெற்கிலிருந்து திசைகள் அனைத்தும் தெளிவுடன் உரைத்த மாமேதை ஐயா மாறன் அவர்களின் நினைவு நாள் இன்று (23.11.2024)

ஆற்றல் மறவர், அறிவுசால் வித்தகர், கருத்துக் களஞ்சியம், புத்தகப் பூங்காவாக ஒப்புயர்வற்ற தலைவர் கலைஞர் அவர்களால், வார்த்தெடுக்கப்பட்ட அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்கள் நெருக்கடி நிலை எனும் நெருப்பாற்றில் புடமிடப்பட்டவர். ஜனநாயக பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய தளகர்த்தர்களில் முதன்மையானவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் தோளிலும், மார்பிலும் தூக்கி வளர்க்கப்பட்டவர். அறிவாசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பைப் பெற்றவர். கழகத்தின் போர்வாளாகவும், கேடயமாகவும் திகழும் முரசொலியின் பிதாமகனாகத் திகழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களின் தடம்பற்றி முரசொலியின் உயர்விற்கு உரமாய்த் திகழ்ந்தவர்.

அதேபோல் நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் நாற்பதாண்டுகளுக்கு மேலான அப்பழுக்கற்ற கொள்கையாளராக, அழுத்தமான வாதத்திறத்துடன் மாற்றார் மருளும் மதிநுட்பத்துடன் எடுத்துரைத்த மிகச்சிறந்த நாடாளு மன்றவாதியாகத் திகழ்ந்தவர்.

டெல்லியின் அரசியல் தட்பவெப்ப சூழ்நிலை அறிந்து, அதை அப்படியே தலைவருக்கு உணர்த்தி, என்கடன் கலைஞருக்கும், கழகத்திற்கும் பணிசெய்து கிடப்பதே என்றே அவர் வாழ்நாளெல்லாம் பயணித்தார்.

பொதுவாழ்க்கையில் ஒரு திறந்த புத்தகமாக விளங்கியவர் ஐயா மாறன் அவர்கள். ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய அவரது ஆங்கில உரையை அறிவார்ந்தோர் ஏற்றுப் போற்றினர்.

வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கொள்கை பரப்பு துணைச் செயலாளர்



சோதனையான காலங்களில் தலைவர் கலைஞர் மற்றும் இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் முரசொலி மாறனின் கருத்தை, வியூகத்தை, ஆலோசனையை ஏற்றே, செயல்பட்டனர்.

உலக வரலாற்றுச் செய்திகளை வீரம் கொப்பளிக்க எடுத்துரைப்பதில் வல்லவர் ஐயா மாறன் அவர்கள்.

அறிவார்ந்தோர் நிறைந்திருந்த கழகத்தில் அவரது எழுத்தும், பேச்சும் மேலும் வலிமை சேர்த்தது.

அவரது வேகமும், விவேகமும் எப்போதும் தலைவர் கலைஞரின் உணர்வினை வெளிப்படுத்தியபடியே இருக்கும்.

முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்திட்ட ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான, " மாநிலத்தில் சுயாட்சி! மத்தியிலே கூட்டாட்சி! " எனும் அடிப்படை கொள்கையினை அகில இந்தியாவும் ஏற்றிடும் வகையில் மாநிலங்கள் தோறும் எடுத்துரைத்து, விரிவான விவாதங்கள் நடத்தி, அனைவரும் ஏற்றிடும் கொள்கை முறையை நிலை நாட்டியவர். மத்தியில் வானளாவிய அதிகாரங்கள் குவிந்து கிடப்பதும், மாநிலங்கள் அங்கு கையேந்தி நிற்கும் நிலையை மாற்றிட, " மாநில சுயாட்சி " எனும் மகத்தான கொள்கையினால் ஆதிக்க கோட்டையின், அதிகார வர்க்கத்தின் அடித்தளத்தை அதிரச் செய்தவர் ஐயா மாறன் அவர்கள். மாநிலங்கள் கூடுதல் உரிமைப் பெற்று, தலைநிமிர்ந்து விளங்கிட காரணமாய்த் திகழ்ந்த கருத்துப் பெட்டகம் கலைஞரின் கண்மணி மாமேதை மாறன் அவர்கள்.

2001-ல் ஜெயலலிதாவின் காட்டுதர்பாரின் காவல்துறையினரின் கொடும் தாக்குதலிலிருந்து தலைவர் கலைஞரை காக்க, வதைபட்டு, வாட்டமுற்ற அவர் வலியையும், வாதையையும் சுமந்தபடியேதான் இறுதி நாட்களை நகர்த்தினார்.

2003-ல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஐயா மாறன் அவர்கள் முத்துவேலரின், அஞ்சுகத்தாயின் மிச்ச ஆயுளைப் பெற்றே மீண்டு வருவார் என்று தலைவர் கலைஞரோடு எல்லோரும் எதிர்பார்த்திருந்த வேளையில், அவர் மீளாத்துயில் கொண்டார் எனும் செய்தியறிந்து, துடிதுடித்த தலைவர் கலைஞர் அவர்கள் அருவியென கண்ணீர் வடித்து, ஆற்றாமையில் இயற்றிய இரங்கற்செய்தியில்,

"மாநில சுயாட்சிக்கு வேதமே! " எழுதி முரசொலித்தாய். ஆனாலும் மத்திய அரசு தான் உனக்கு இறுதி இராணுவ மரியாதை செலுத்தியது.

குவளையில் பிறந்து குவலயம் போற்றிடப் பணிபுரிந்தாய்! அந்தப் புகழ் பூவின் மணம் சிறிதும் குறையாமல் புயல் அடிக்கும் என் நெஞ்சில் இப்போதும் தென்றலாய் வீசிக் கொண்டிருக்கிறாய்! நீ போகலாம்; உன் நினைவுகளை என்னை விட்டு எடுத்துச் செல்ல உன்னால் முடியுமா? முடியவே முடியாது!" எனக் கண்ணீரில் கடிதம் எழுதி தன்னைத்தானே தேற்றிக் கொள்ள முயன்றார்.

இத்தகைய புகழுக்குரிய தியாக தீபம், கொள்கை வேங்கை, மாசற்ற மாணிக்கம், தலைவர் கலைஞர் வளர்த்த தங்கம் அறிவுலகமேதை ஐயா மாறன் அவர்களின் நினைவு நாளாம் இந்நாளில் கழகத்தை கட்டிக்காக்கும் கம்பீரத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரத்தினை வலுப்படுத்த கழகத்தினர் அனைவரும் ஒற்றுமையுடன் சபதமேற்க வேண்டும்.

ஆம்.

அத்தகைய சூழலில் தான் நாம் இருக்கிறோம்.

பதுங்கிப் பாயும் பாசிச கூட்டம் ஒருபுறம். அச்சம் தரும் ஆரிய மாயை ஒருபுறம்.

யார் ஆண்டாலென்ன! என் வயிறு நிறைகிறது என்போர் மறுபுறம்.

திராவிட அலர்ஜி கொண்ட திடீர் புனிதர்கள் இன்னொரு புறம்.

இந்த சூழலில் தான் நமது தலைவர் தமிழகத்தையும் காத்து, இந்தியாவெங்கும் ஜனநாயகம் காக்கப்பட தான் மட்டுமின்றி தனது மகனாம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் நாடு காக்க, தமிழினம் தழைக்க, அப்பன், பாட்டன் அடியொற்றி மக்கள் பணியாற்ற அர்ப்பணித்தார்.

இந்தியாவில் எத்தனை எத்தனையோ அரசியல் தலைவர்களின் வீட்டுப் பிள்ளைகள் அமெரிக்காவிலும், ஐரோப்பிய சீமையிலும் ஐம்பது வயது வரை வாழ்வை அனுபவித்து, தேர்தலை சந்திக்காமல், தேடிப் போய் மக்களின் ஆதரவு பெறாமல் டெல்லியில் பதவி பெற்ற பல வரலாறு உண்டு.

ஏன்? தலைவர் கலைஞரின் தயவினால் புறவாசல் வழியே மந்திரியானவரும் இருக்கிறீர்களே!

அப்படி சர்வ வல்லமை மிகுந்திருந்த தலைவர் கலைஞர் அவர்கள் இன்றில்லை!

பெருமைமிகு பிசிராந்தையார் பேராசிரியர் அவர்கள் இல்லை!

முக்கிய தளகர்த்தர் முரசொலி மாறன் அவர்கள் இல்லை!

"நான்சாய்ந்து கொண்ட கடைசி தூண்" எனதுயரமிகுதியில் தளபதியவர்கள் குறிப்பிட்ட ஐயா முரசொலி செல்வம் அவர்கள் இல்லை.

ஆனால்,

இவ்வனைவரின் அறிவு, துணிவு, கனிவு,தொலைநோக்குப் பார்வை, மிகுந்த தளபதியவர்கள் நம்மை சேயை தாக்க வரும் கழுகிடமிருந்து காக்கும் தாயைப் போல் ஐம்பதாண்டுகளுக்கு முந்தைய முரசொலி எனும் தலைப்பிற்கு முன்னிருக்கும் லச்சினைபோல் நம்மை காக்கும் கரம் கொண்டு வழிநடத்துகிறார். அவரோடு நாமிருக்கிறோம். அவரது கரத்தை தமிழரெல்லாம் வலுப்பெறச் செய்வோம்.

இதைத்தான் ஐயா மாறன் அவர்கள் விரும்புவார்.

ஓங்குக! மாநில சுயாட்சியை மத்தியில் ஒலித்த மாமேதை முரசொலி மாறன் அவர்களின் பெரும்புகழ்!




தி.மு.க.
இளைஞர் அணி
கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை 11 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 4, 7 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 23/11/2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | வேதாரண்யம் | சிம்பு மீரா திருமண மஹால், நாகை சாலை, வேதாரண்யம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி